**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# பரீட்சகரின் அறிக்கை

### மட்டம் I I பரீட்சை – 2022 யூலை

## (204) வணிக முகாமைத்துவம்

இவ்வினாத்தாள் **A, B, C** என 3 பகுதிகளையும் 07 வினாக்களையும் கொண்டுள்ளது.

## பகுதி A

### வினா இல. 01

முதலாம் வினா பதினைந்து (15) OTQ களைக் கொண்டது. முதலாவது வினாவுக்கான மொத்த புள்ளிகள் 25 ஆகும். தரப்பட்டுள்ள வினாக்கள் வணிக முகாமைத்துவ பாடத்திட்டத்திலுள்ள அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கியதாகும்.

உபவினா **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்கள் தொடர்பில் மிகவும் சரியான விடையை தெரிவுசெய்து விடைப்புத்தகத்தில் தெரிவுசெய்யப்பட்ட விடையின் இலக்கத்தினை எழுத வேண்டும். இவற்றுக்கு 10 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான மாணவர்கள் சரியான விடையினை தெரிவுசெய்துள்ளனர். பாடம்பற்றிய குறைந்த அறிவின் காரணமாக சில மாணவர்கள் சரியான விடையினை தெரிவுசெய்யாததன் காரணமாக குறைந்த புள்ளிகளை பெற்றுள்ளனர்.

உபவினா **1.6** தொடக்கம் **1.10** வரையான வினாக்கள் தொடர்பில் கூட்டுக்குள் தரப்பட்டுள்ள இரு வினாக்களில் சரியான விடையினை தெரிவுசெய்து விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்துடன் எழுத வேண்டும். இப்பகுதிக்கும் பெரும்பாலான மாணவர்கள் சரியான விடையினை தெரிவுசெய்துள்ளனர். சில மாணவர்கள் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை கவனத்தில் கொள்ளாது சரியான விடைக்கு பதிலாக 1 அல்லது 2 எனக் குறிப்பிட்டுள்ளனர். ஒவ்வொரு வினாவும் ஒரு புள்ளி வீதம் ஐந்து புள்ளிகள் வழங்கப்படும்.

உபவினா **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களுக்கு விடைத்தாளில் குறுகிய விடையினை எழுதுமாறு வேண்டப்பட்டுள்ளது.

**1.11** வினைத்திறன் மற்றும் பயனுறுதித்தன்மை ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாக விபரிக்குமாறு பரீட்சார்த்திகளை கேட்கப்பட்டுள்ளது. இருப்பினும் பெரும்பாலான மாணவர்கள் வினைத்திறன் மற்றும் பயனுறுதித்தன்மை ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டை விளக்கியுள்ளனர். சிலர் மட்டும் வினைத்திறன் என்பது சரியாகச் செய்தல் எனவும் பயனுறுதித்தன்மை என்பது சரியானவற்றை செய்தல் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

**1.12** போட்டரின் பெறுமதிச் சங்கிலியிலுள்ள இரண்டு (02) துணை நடவடிக்கைகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டுள்ளது. பெரும்பாலான மாணவர்கள் திருப்திகரமான விடையினை வழங்குவதற்கு தவறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. சில பரீட்சார்த்திகள் விடையினை எழுத தவறியதுடன் விடையினை எழுதிய மாணவர்களும் தவறான விடையினை குறிப்பிட்டுள்ளனர். இவ்வினாக்கள் இலகுவாக புள்ளிகளை பெறக்கூடியவை.

1.13 நிறுவனமொன்றின் பயிற்சிகள் ஊடாக அடைந்து கொள்ளக்கூடிய இரண்டு (02) நன்மைகளைக் குறிப்பிடுமாறு வேண்டப்பட்டுள்ளது. பெரும்பாலான மாணவர்கள் வெற்றிகரமாக பதிலளித்துள்ளனர். அனைத்து ஏற்றுக்கொள்ளக்கூடிய விடைகளுக்கும் புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.

1.14 முகாமைச் செயன்முறையின் பிரதான தொழிற்பாடுகளை இனங்காண்பதற்கு இவ்வினா அமைக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான மாணவர்கள் வெற்றிகரமாக புள்ளிகளை பெற்றுள்ளனர்.

1.15 நிறுவனம் ஒன்றிலுள்ள ஏனைய வளங்களுடன் ஒப்பிடும்போது மனித வளங்களை வேறுபடுத்துகின்ற இரண்டு (02) பண்புகளைக் குறிப்பிடுமாறு இவ்வினா வேண்டப்பட்டுள்ளது. பெரும்பாலான மாணவர்கள் சரியான விடையினை வழங்கியுள்ளனர். ஏனைய சிலர் மனிதவள முகாமைத்துவத்தின் தொழிற்பாடுகளை குறிப்பிட்டுள்ளனர்

**இவ்வினாவிற்கான ஒட்டுமொத்த செயல்திறன் திருப்திகரமாக உள்ளது.**

## பகுதி B

இப்பகுதியானது ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட 05 கட்டாய வினாக்களை கொண்டுள்ளது. மொத்தம் 50 புள்ளிகள். இவ் ஐந்து வினாக்களுக்குமான பெரும்பாலான மாணவர்களின் செயல்திறன் மட்டம் திருப்திகரமாக இருந்தது. சில மாணவர்கள் விடையினை எழுத தவறியதுடன் சிலர் சில வினாக்களுக்கு திருப்திகரமற்ற விடையினை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வினா இல. 02

இவ்வினாவானது பகுதி **a** மற்றும் பகுதி **b** இனைக் கொண்டுள்ளது.

**(a)** ஒரு நிறுவனத்திற்கு முகாமை ஏன் முக்கியமானது என்பதற்கான நான்கு (04) காரணங்களைக் குறிப்பிடுமாறு இவ்வினாவானது வேண்டப்பட்டுள்ளது. பெரும்பாலான மாணவர்கள் சரியான விடையினை எழுதி முழுப் புள்ளிகளையும் பெற்றுள்ளனர். சில சந்தர்ப்பங்கள் முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தினை உற்பத்தி வணிகம் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி சார்பாக விளக்குமாறு தெளிவாகக் குறிப்பிட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் சில மாணவர்கள் காரணங்களை குறிப்பிடுமாறு வழங்கப்பட்ட அறிவுறுத்தலை கவனத்தில் கொள்ளாது விரிவான விடையினை வழங்கியுள்ளனர்.

**(b)** தற்போதைய பொருளாதாரச் சிக்கல்களுடன் இலங்கையிலுள்ள முகாமையாளர்கள் எதிர்நோக்கும் மூன்று (03) சவால்களை விபரிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. மாணவர்கள் நாட்டினுடைய தற்போதுள்ள அரசியல், பொருளாதார, மற்றும் சமூக சூழ்நிலையை கருத்திற்கொண்டு சரியான விடையினை வழங்கியுள்ளனர். பரீட்சார்த்திகள் இவ்வினாவிற்கு வெற்றிகரமாக விடையளித்ததுடன் இவ்வினாவிற்கான புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

**இவ்வினாவிற்கான ஒட்டுமொத்த செயல்திறன் திருப்திகரமாக உள்ளது.**

## வினா இல. 03

இது ஒரு வழக்கினை அடிப்படையாகக் கொண்ட வினாவாகும். இவ்வினா நிறுவனமானது தீர்மானமெடுத்தலின்போது கருத்தில்கொள்ளவேண்டிய காரணிகளை நோக்கியதாகும். இவ்வினாவானது பகுதி a, b மற்றும் பகுதி c இனைக் கொண்டுள்ளது.

**(a)** வரையறுக்கப்பட்ட ABC கம்பனியின் CEO நடைமுறைப்படுத்தியிருக்கக்கூடிய இரண்டு (02) வெவ்வேறு குழுத் தீர்மானமெடுத்தல் நுட்பங்களைப் பட்டியலிடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான பரீட்சார்திகள் இரண்டு (02) வெவ்வேறு குழுத் தீர்மானமெடுத்தல் நுட்பங்களைப் பட்டியலிட தவறியுள்ளனர். பெரும்பாலான பரீட்சார்திகளின் விடையானது பேச்சுவார்த்தையின் பின்னர் தீர்மானமெடுத்தலாகும். ஒதுக்கப்பட்ட இரண்டு புள்ளிகளை ஒருசில மாணவர்கள் மட்டுமே பெற்றுள்ளனர்.

**(b)** கம்பனியின் தீர்மானமெடுத்தலில் தகவல்கள் முக்கியத்துவம் பெறுகின்ற மூன்று (03) வழிகளை விபரிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. தீர்மானமெடுத்தலில் தகவல்கள் முக்கியத்துவம் பெறுகின்றமையை ஒருசில மாணவர்கள் மட்டுமே விளக்கியுள்ளனர். பெரும்பாலான பரீட்சார்திகள் இரண்டு (02) வெவ்வேறு குழுத் தீர்மானமெடுத்தல் நுட்பங்களைப் பட்டியலிட தவறியுள்ளனர். பெரும்பாலான பரீட்சார்திகளின் விடையானது பேச்சுவார்த்தையின் பின்னர் தீர்மானமெடுத்தலாகும். ஒதுக்கப்பட்ட இரண்டு புள்ளிகளை ஒருசில மாணவர்கள் மட்டுமே பெற்றுள்ளனர். குறித்த சில பரீட்சார்திகள் தகவல்களின் தொழிற்பாடுகளை விளக்குவதன் மூலம் விடையளித்துள்ளனர்.

**(c)** வணிகச் செயன்முறை மீள்பொறியியலாக்கலின் (BPR) இரண்டு (02) அனுகூலங்களை இனங்காணுமாறு இவ்வினா கேட்கப்பட்டுள்ளது.

**இவ்வினாவிற்கான ஒட்டுமொத்த செயல்திறன் திருப்திகரமாக உள்ளது.**

## வினா இல. 04

இவ் வினா தொழிற்பாட்டு முகாமைத்துவத்துவம் மற்றும் திட்டமிடல் மற்றும் கட்டுப்படுத்தலை அடிப்படையாகக் கொண்ட வினாவாகும்.. இவ்வினாவானது பகுதி **a, b** மற்றும் பகுதி **c** இனைக் கொண்டுள்ளது.

**(a)** திட்டமிடல் மற்றும் கட்டுப்படுத்தலுக்கிடையிலான தொடர்பை விபரிக்குமாறு இவ்வினாவில் கேட்கப்பட்டுள்ளது. திட்டமிடல் மற்றும் கட்டுப்படுத்தலுக்கிடையிலான தொடர்பை விபரித்து இலகுவாக புள்ளிகளை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பினும் ஒருசில பரீட்சார்திகளே வெற்றிகரமாக பதிலளித்து ஒதுக்கப்பட்ட புள்ளிகளை பெற்றுள்ளனர்.

**(b)** நிறுவனமொன்றின் வெற்றிக்கு தொழிற்பாட்டு முகாமைத்துவத்தின் பிரதான தொழிற்பாடுகள் மூன்றினைக் (03) குறிப்பிடுமாறு கேட்கப்பட்டுள்ளது. இவ்வனாவுக்கான செயல்திறன் மிக மோசமான நிலையில் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

சராசரியான மாணவர்கள் இவ்வினாவிற்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளை பெற்றுக்கொண்டதுடன் பெரும்பாலான மாணவர்கள் இவ்வினாவிற்கு சரியான பதிலை எழுதவில்லை என்பதையும் அவதானிக்க முடிந்தது. இவ்வினாவிற்கு பதிலளித்த மாணவர்களும் முழுமையான புள்ளிகளை பெற தவறியுள்ளனர். சில மாணவர்கள் வினாவை சரியாக விளங்கிக் கொள்ளாது பதிலளித்துள்ளனர்.

**(c)** வணிக நிறுவனமொன்றின் வழங்கல் சங்கிலியை முகாமை செய்வதற்கு பயன்படுத்தக்கூடிய இரண்டு (02) தந்திரோபாயங்களை விபரிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்திகள் இவ்வினாவிற்கு மிகவும் மோசமான பதில்களை எழுதியுள்ளனர். ஒரு சில பரீட்சார்திகள் தந்திரோபாயங்களை விளக்கமின்றி குறிப்பிட்டுள்ளனர்.

**இவ்வினாவிற்கான ஒட்டுமொத்த செயல்திறன் மிகவும் மோசமான நிலையில் உள்ளது.**

## வினா இல. 05

இவ் வினாவானது மனிதவள முகாமைத்துவத்தில் பரீட்சார்த்திகளின் அறிவை கோட்பாட்டு ரீதியாக மற்றும் பகுதி அம்சமாகவும் தற்போதய பொருளாதார சூழல் பற்றிய அறிவினையும் சோதிப்பதற்கு எதிர்பாக்கப்பட்டுள்ளது. இது ஒரு சரியான நேரக் கேள்வியாகும். மொத்தம் 10 புள்ளிகள்.

**(a)** ஒரு உற்பத்திக் கம்பனிக்கு தொழிற்பாடுகள் ஏன் முக்கியமானவை என்பதற்கான மூன்று (03) காரணங்களை விபரிக்குமாறு இவ்வினா அமைந்துள்ளது.

கோட்பாட்டு மற்றும் நடைமுறை அறிவு இரண்டையும் பயன்படுத்தி விடையளிக்கக்கூடிய ஒரு வினாவாக இருந்துள்ளது. பரீட்சார்த்திகள் இந்த பகுதிக்கு வெற்றிகரமாக பதிலளித்துள்ளனர். பெரும்பாலானவர்கள் மனிதவள முகாமைத்துவத்தின் தொழிற்பாடுகளின் முக்கியத்துவத்தை விளக்கி புள்ளிகளை பெற்றுள்ளனர். குறித்த சில மாணவர்கள் தமது நடைமுறை அனுபவத்தை கொண்டு சிறந்த விடைகளை எழதியுள்ளனர்.

**(b)** ஊழியர் சேமநல முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்திற்கான காரணங்களை இவ்வினா சோதித்துள்ளது. சேமநலமானது வணிகத்துடனும் நாளாந்த வாழ்வுடனும் நெருக்கமாக இருப்பதால், பரீட்சார்த்திகள் நடைமுறை அனுபவத்தைக் கொண்டு சிறந்த முறையில் விடையளித்துள்ளனர். COVID சூழ்நிலையிலும் சேமநல முகாமைத்துவத்தின் முக்கியத்துவங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டதால், COVID கால அனுபவத்தை கொண்டு வெற்றிகரமான விடைகள் எழுதப்பட்டுள்ளன.

**இவ்வினாவிற்கான ஒட்டுமொத்த செயல்திறன் திருப்திகரமாக உள்ளது.**

## வினா இல. 06

இவ் வினா இலக்குச் சந்தை, பண்டக்குறி, மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் என்பன தொடர்பான அறிவினை சோதிப்பதற்கான வினாவாகும்.... இவ்வினாவானது பகுதி a, b மற்றும் பகுதி c இனைக் கொண்டுள்ளது. மொத்தம் 10 புள்ளிகள்.

**(a)** வெற்றிகரமான பண்டக்குறி ஒன்றிற்கான இரண்டு தேவைப்பாடுகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. பெரும்பாலானவர்களின் விடைகள் திருப்திகரமாக இல்லாததால் புள்ளிகள் மிகவும் குறைவான மட்டத்தில் பெறப்பட்டதை அவதானிக்க முடிந்தது. ஒதுக்கப்பட்ட புள்ளிகளை ஒரு சில பரீட்சார்த்திகள் மட்டுமே பெற்றுள்ளனர். இவை பாடவிடயங்கள் ஒழுங்காக கற்கப்படாமையை வெளிப்படுத்துகின்றது.

**(b)** சந்தைப்படுத்தலில் பயன்படுத்தப்படும் இரண்டு (02) இலக்குப்படுத்தல் தந்திரோபாயங்களைக் குறிப்பிடுமாறு இவ்வினா அமைந்துள்ளது. குறிப்பிட்ட சில மாணவர்கள் மட்டுமே திருப்திகரமாக பதிலளித்து புள்ளிகளை பெற்றுள்ளனர். பிரிவுபடுத்தல், இலக்குப்படுத்தல், மற்றும் நிலைப்படுத்தல் போன்றவற்றின் தெளிவற்ற தன்மை காரணமாக இவை ஏற்பட்டுள்ளதாக தோன்றுகின்றது.

**(c)** டிஜிடல் சந்தைப்படுத்தலின் இரண்டு (02) முறைகளை விபரிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்திகள் திருப்திகரமாக விடையளித்துள்ளனர். பெரும்பாலான பரீட்சார்திகள் இப்பகுதி தொடர்பாக சிறந்த விளக்கத்தினையும் அறிவினையும் கொண்டுள்ளனர்.

**இவ்வினாவிற்கான ஒட்டுமொத்த செயல்திறன் சராசரி மட்டத்தில் உள்ளது.**

## பகுதி C

**வினா இல. 07**

இது ஒரு வழக்காய்வு வினாவாகும். மொத்தம் 25 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்வினா, கோட்பாட்டு விடயங்கள் எவ்வாறு தரப்பட்ட சூழ்நிலைக்கேற்றவாறு மாணவர்களால் தொடர்புபடுத்தப்படுகின்றது என்பதை சோதிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வினாவானது பகுதி **a, b, c, d, e** என 5 பகுதிகளை கொண்டுள்ளது.

**(a)** நவீன தலைவர்களின் வெற்றிக்குத் தேவையான நான்கு (04) தலைமைத்துவச் சிறப்புக் காரணிகளை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டுள்ளது. நான்கு (04) தலைமைத்துவச் சிறப்புக் காரணிகளை குறிப்பிடுமாறு கேட்கப்படும் போது தலைமைத்துவச் சிறப்புக் காரணிகளை குறிப்பிடுவதற்கு பதிலாக விளக்கம் அளிக்கவேண்டிய அவசியமில்லை. பெரும்பாலான பரீட்சார்திகள் தலைவரின் பண்புகளை குறிப்பிட்டுள்ளனர். இவை பரீட்சார்த்திகள் வினாவை சரியாக விளங்கிக்கொள்ளாமையைக் காட்டுகின்றது.

**(b)** ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்காக ‘‘ரயல்’’ இல் இரு காரணிக் கோட்பாட்டை எவ்வாறு பயன்படுத்தலாமென விபரிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இரு காரணிக் கோட்பாட்டை கோட்பாட்டு ரீதியாக விளக்க வேண்டும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இரு காரணிக் கோட்பாட்டுக்கு பதிலாக ஊக்கப்படுத்தல் தொடர்பான விளக்கத்தை வழங்கியுள்ளனர். திருப்திகரமற்ற விடையின் காரணமாக பெரும்பாலான பரீட்சார்த்திகள் புள்ளிகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை. விடைகள் விளக்கப்பட்டிருப்பினும் விளக்கங்கள் வெற்றிகரமாக இல்லை. குறித்த சில மாணவர்கள் இரு காரணிக் கோட்பாடு பற்றி எழுதியிருப்பினும் அவை ஊக்கப்படுத்தல் மற்றும் இரு காரணிக் கோட்பாட்டுக்கு இடையிலான உள்ளக தொடர்பினை கட்டியெழுப்பவில்லை.

**(c)** ‘‘ரயல்’’ நடைமுறைப்படுத்தக்கூடிய இரண்டு (02) வெவ்வேறான சந்தைத் துண்ட அடிப்படைகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இவ்வினாவிற்கு திருப்திகரமற்ற செயல்திறன் மட்டத்தை அவதானிக்க முடிந்தது. பரீட்சார்த்திகள் இலகுவாக புள்ளிகளை பெறக்கூடிய இலகுவான வினாவாகும். இதை பார்க்கும் போது சந்தைப்படுத்தல் பற்றிய கோட்பாட்டு அறிவினை விருத்திசெய்தல் வேண்டும்.

**(d)** ‘‘ரயல்’’ கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு சிறந்த தந்திரோபாயத்தின் மூன்று (03) பண்புகளை விபரிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. சிறந்த தந்திரோபாயமொன்றின் பண்புகளை விபரிக்கும்பொழுது பல தொடர்பற்ற விடயங்கள் எழுதியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. கேள்விக்கு தொடர்புடைய விடயங்களை எழுதுவது முக்கியமானதாகும். விளக்கமான பதில்களை எழுதுவது புள்ளிகளை பெற்றுத்தராது. ஒருசில மாணவர்கள் மட்டும் ஒரு சிறந்த தந்திரோபாயத்தின் பண்புகளை விபரித்து ஒதுக்கப்பட்ட புள்ளிகளை பெற்றுக்கொண்டுள்ளனர்.

**(e)** ‘‘ரயல்’’இல் மாற்றத்தை ஏற்றுக்கொள்வதற்கு சுசந்த ஊழியர்களை ஊக்குவிக்கக்கூடிய மூன்று (03) வழிகளை விபரிக்குமாறு இவ்வினா அமைந்துள்ளது. ‘‘மாற்றம்’’ என்ற கருப்பொருளை விளங்கிக் கொள்ளல் மிகவும் குறைவு. ஆகவே, இவ்வினாவிற்கான செயல்திறன் மட்டம் மிகக்குறைவாக உள்ளதை அவதானிக்க முடிந்தது. மாற்றத்தை ஊக்குவிக்கும் வழிகள் மற்றும் மாற்றத்தை தூண்டும் வழிகள் என இருவகையான விடைகளை அவதானிக்க முடிந்தது.

**இவ்வினாவிற்கான ஒட்டுமொத்த செயல்திறன் சாதாரண மட்டத்தில் உள்ளது.**

------

**<u>பரீட்சார்த்திகளின் புரிதல் மற்றும் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** பாடத்திட்டத்தை / பாடப்புத்தகத்தை நன்றாகக் கற்கவும்.

**(2)** வினாத்தாளைப் பெற்றதும் அதிலுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும் (இந்த நோக்கத்திற்காக மேலதிக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது).

**(3)** பரீட்சார்த்திகள் வினாவைப் பல தடவைகள் வாசித்து அதில் என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். நேரடியான விடையொன்று எதிர்பார்க்கப்படும் போது தேவையற்ற விவரிப்புகளையும் விபரங்களையும் எழுதுவதைத் தவிர்க்கவும்.

**(4)** விடைகள் ஒரே மொழியில் மாத்திரம் எழுதப்பட வேண்டும். அது நீங்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது குறிப்பிட்ட மொழியாக இருப்பதுடன் ஒவ்வொரு வினாவுக்குமான விடைகள் ஒரு புதிய பக்கத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

**(5)** பரீட்சையின்போது நேரத்தை வினைத்திறனான முறையில் பயன்படுத்தவும்.

**(6)** விடைப்புத்தகத்தைக் கையளிப்பதற்கு முன்னர், சகல வினா இலக்கங்களும் உங்களுடைய சுட்டெண்ணும் சரியாக எழுதப்பட்டிருக்கிறதா என்பதை இருமுறை பரீட்சித்துக் கொள்ளவும்.

**(7)** ‘‘செயல் வினைச்சொல் செவ்வை நிரல்’’ வினாத்தாளின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் அந்த நிரலில் தரப்பட்ட வரைவிலக்கணங் களின் அடிப்படையில் விடையளித்தல் வேண்டும்.

**(8)** கையெழுத்து தெளிவாக இருப்பதையும் விடைகளுக்கான வினா இலக்கங்கள் சரியாக எழுதப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

**(9)** ஏஏரீ இனால் வெளியிடப்பட்ட சுய கற்றல் புத்தகம், கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகளை வாசிப்பது பயனுடையதாகும்.

**(10)** உங்களது அறிவை மேம்படுத்திக்கொள்ளும் பொருட்டு கடந்தகால வினாத்தாள்கள் மற்றும் முன்னோடிப வினாத்தாள்களுக்கு விடையெழுதிப் பயிற்சி பெறுவது சிறந்தது.

**(11)** பரீட்சையில் சித்தியடையும் உறுதியான நோக்கத்துடனும் நல்ல தயார்படுத்தலுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

-***-